முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 149/2015

| | | |
|---|---|---|
| பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | சுகுணா |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 22ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் 4ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி இறந்துவிட்ட காரணத்தால் தான் என்னை தரப்பினராக சேர்த்துள்ளனர் என்றால் சரிதான். என் கணவர் உயிருடன் இருக்கும்போது இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நடராஜன் என் கணவரின் அண்ணன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து என்னுடைய மாமியார் தனபாக்கியம் உடையது என்றால் சரிதான். அதில்தான் பாகம் கேட்டு வாதி நடராஜன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல தனபாக்கியத்தின் உடன்பிறந்த சகோதரர்கள் சீனிவாசன், ராஜா சகோதரி காந்தாமணி ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் கணவருடன் உடன்பிறந்தவர்கள் நடராஜன், புஷ்பா, பச்சையம்மாள், மல்லிகா மற்றும் பானுமதி ஆகியோர்கள் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் வாதியை தவிர தனது கணவரும் மற்ற சகோதரிகளும்

பாகத்திற்காக தொகையை பெற்றுக்கொண்டுள்ளார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதுவரை நடராஜனுக்கு பாகமோ, பணமோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்காகதான் பாகம்கேட்டு இந்தவ ழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல வாதிக்கு பாகத்தை பிரித்துகொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அதேபோல வாதி கோரியுள்ளவாறு பரிகாரங்கள் வழங்க எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.